115—

நிதி உதவி

***21405—திரு. சு. ரவி:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீன்பிடித் தடைக் காலத்தில் கடல் மீனவர்களுக்கு அரசு வழங்கும் நிதியுதவியை, உள்நாட்டு மீனவர்களுக்கும் வழங்கிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மீன்பிடித் தடைக் காலத்தில் கடலோர மீனவர்களுக்கு நிதியுதவி, அதாவது மீன்பிடித் தடைக் கால நிவாரணம் வழங்கப்படுவதைப்போன்று, உள்நாட்டு மீனவர்களுக்கும் நிதியுதவி வழங்க இயலாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மீன் வளமும், மீனவர் நலமும் ஒருங்கே காக்கும் வகையில் ஒப்பற்ற திட்டங்கள் கொண்டுவந்து, மீன்பிடித் தடைக் காலத்தில் மீனவர் குடும்பங்களுக்கு ரூ.2,000/—, மீன்பிடிப்புக் குறைந்த காலத்தில் மீனவர் குடும்பங்களுக்கு ரூ.4,000/—, ஆழ்கடல் மீன் பிடிப்பிற்குப் புதிய படகுகள் வாங்கிட 50 சதவிகிதம் மானியம் என மீனவ மக்களின் நலனுக்காக அடுக்கடுக்கான திட்டங்களை அள்ளித் தரும் அற்புதத் தலைவியே! மீனவர் நலனுக்காக கச்சத் தீவை மீட்டெடுக்க சட்டப் போராட்டம் நடத்திவருபவர், அம்மா தாங்களே! வெல்லப் போவதும் அம்மா நீங்களே! (மேசையைத் தட்டும் ஒலி) சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மீனவத் தொழிலாளிகளை முதலாளிகளாக ஆக்கிய அன்னையே, தங்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.*

2014 ஜூலை 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்நாட்டு மீனவர்கள் காலம் காலமாக ஏரி, குளங்களில் மீன் பிடித்து ஜீவனம் செய்து வருகிறார்கள். இப்பொழுதெல்லாம் பருவ மழை பொய்த்துவிட்ட காரணத்தினால், ஏரி, குளங்களில் நீர் நிரம்பாததால், மீன்பிடித் தொழில் தொடர்ந்து இருப்பதில்லை. அவர்களுக்கு மீன்பிடித் தொழிலைத் தவிர வேறு எந்தத் தொழிலும் தெரியாததால், தற்போது கடல் மீன்களை வாங்கி, வியாபாரம் செய்து குடும்பத்தை நடத்தி வருகிறார்கள். அந்த மீன்பிடித் தடைக் காலத்தில் கடல் மீன்களும் கிடைக்காததால், இவர்களும் எவ்வித வருமானமும் இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, கடலோர மீனவர்களுக்குப் பல்வேறு சலுகைகளை வாரி வழங்கும், மீனவ மக்களின் ஒளி விளக்காய்த் திகழும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், கடலோர மீனவர்களுக்கு வழங்கும் நிதியுதவியைப் போல், உள்நாட்டு மீனவர்களுக்கும் நிதியுதவி வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் வளத்தைப் பாதுகாத்திட மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட மீன்பிடித் தடைக் காலமானது ஒவ்வோராண்டும் கிழக்குக் கடற்கரைப் பகுதி, அதாவது வங்காள விரிகுடா பகுதியிலே ஏப்ரல் 15 முதல் மே மாதம் 29 ஆம் தேதி வரையிலும், மேற்குக் கடற்கரைப் பகுதியில், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஜூன் மாதம் 15 ஆம் தேதி முதல் ஜூலை மாதம் 29 ஆம் தேதி வரை 45 நாட்களை மீன்பிடித் தடைக் காலமாகப் பின்பற்ற வேண்டியுள்ளதால், கடல் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. மீன்பிடிப்புத் தடை செய்யப்பட்ட காலங்களில் மீன்பிடிப் படகுகளின் பணியாளர்களாகவும், தினக் கூலிகளாகவும் தொழில்புரியும் மீனவர்கள் வருமானம் ஈட்டுவதற்கு வேறு வழியில்லாததால், அவர்களுடைய குடும்பங்களைப் பராமரிப்பதற்கு மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள். அதனால் கடலோர மீனவர்களுக்கு மீன்பிடித் தடைக் கால நிவாரண உதவி வழங்கப்படுகிறது. உள்நாட்டு மீனவர்கள் உள்நாட்டு மீன்பிடிப்புப் பகுதிகளில் மீன்பிடிப்புத் தொழிலை மேற்கொள்வதுடன், பிற*

தொழில்களிலும் ஈடுபடக்கூடியவர்களாக உள்ளனர். இதில் மீன்பிடித் தடைக் காலம் உள்நாட்டு மீனவர்களுக்கு விதிக்கப்படுவதில்லை. எனவே, மீன்பிடித் தடைக் காலங்களில் கடலோர மீனவர்களுக்கு வழங்கும் உதவித் திட்டங்கள் போன்று உள்நாட்டு மீனவர்களுக்கும் வழங்குவது போன்ற திட்டம் ஏதும் அரசின் செயல்பாட்டில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்நாட்டு மீனவர்கள் ஏரி, குளங்களை நம்பியும், மீன்பிடித் தொழிலை வைத்தும்தான் வாழ்ந்து வருகிறார்கள். ஏரி, குளங்களில் நீர் வற்றி வறட்சி ஏற்படும் கோடைக் காலத்திலாவது, அந்த மீன்பிடிப்புத் தொழில் இல்லாமல் இருக்கும் உள்நாட்டு மீனவர்களுக்கு நிதியுதவி வழங்க, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கருணைப் பார்வைக்கு இதனை எடுத்துச் சென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதியுதவியைப் பெற்றுத் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11—05

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உள்நாட்டு மீனவர்கள் கடல் மீன் பொருட்களை வாங்கி வியாபாரம் செய்துகொண்டிருக்கின்ற காரணத்தினால், அவர்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட வேண்டுமென்று கூறினார்கள். அவ்வாறு உள்நாட்டு மீனவர்கள் கடல் மீன் பொருட்களை வியாபாரத்திற்குப் பயன்படுத்துவதாக இருந்தால், நல வாரியத்தின் மூலமாக அவர்கள் உறுப்பினர்களாகி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சிறப்புத் திட்டத்தின்கீழ் ரூ.4,000 நிதியுதவி பெறுவதற்கு வழி இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2014 ஜூலை 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறை தடை விதித்திருப்பதனால் தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல், ஊட்டமலை பகுதியில் இருக்கக்கூடிய 124 மீனவர் குடும்பங்கள் கடந்த 6 மாத காலமாக மீன் பிடிக்கச் செல்ல முடியாமல் வாழ வழியில்லாமல் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஏறத்தாழ 46 ஆண்டு காலமாக மீன் வளத் துறையின் அனுமதியைப் பெற்று, மீன் பிடித்துக் கொண்டிருந்த அவர்களுக்கு தற்போது மீன் பிடிக்கத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கும் நிதியுதவி வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? அதே நேரத்தில் தப்பக்குழி, ராசிமணல், பிலிகுண்டு பகுதிகள் வழியாக அந்த மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உள் நாட்டு மீனவர்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுமா என்று கேட்கிறார்கள். இதுவரை தமிழக அரசின் வரலாற்றிலேயே உள் நாட்டு மீனவர்களுக்கும் அதிகப்படியான உதவிகளை அளித்துக்கொண்டிருப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) நீர் நிலைகளான ஆறு, குளம், ஏரிகளிலே மீன் பிடிக்கின்ற உள் நாட்டு மீனவர்களுக்கு ரூ.25,000 செலவில் ரேடியேட்டர், ஜெனரேட்டர் வாங்குவதற்கும், ஒரு ஏக்கரில் மீன் பண்ணைக் குட்டைகள் அமைப்பதற்கு ரூ.50,000 நிதி உதவியும் அளித்துக்கொண்டிருப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடக்கூடிய பகுதி மத்திய ரிசர்வ் வனப் பகுதிக்குச் சொந்தமான பகுதி. இதற்கு மத்திய அரசுதான் அனுமதி தரவேண்டும். அனுமதி தருவது என்பது மத்திய வனத் துறை சம்பந்தப்பட்டதாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க உள் நாட்டுப் பகுதிகளில் இருக்கின்ற மீனவர்களின் நிலையை அறிந்து செயல்படுகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்தப் பகுதியில் இருக்கின்ற*

மீனவர்களுக்கு வேண்டிய நிதி உதவியைத் தருவார்கள். அப்படி யாருக்காவது, எங்கேயாவது நிதி உதவி பெறப்படவில்லை என்பதைக் குறிப்பிட்டுச் சொன்னால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, இந்த அரசால் பெற்று வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 116, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி, மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

116—

மணிமண்டபம்

***37542—திரு. வீ.பி. நாகைமாலி:**

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினத்தில் தமிழறிஞர் மறைமலை அடிகளாருக்கு மணிமண்டபம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினத்தில் தமிழறிஞர் மறைமலை அடிகளாருக்கு மணிமண்டபம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்க் கடல் என்றும், தனித் தமிழ் இயக்கத் தந்தை என்றும் போற்றப்படும் மறைமலை அடிகள் நினைவாக அவர் பிறந்த ஊரான நாகப்பட்டினத்தில் ஒரு மணிமண்டபம் கட்டித் தர மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்*